20th January 1964]

பத்திரப் பதிவு அலுவலகங்கள்

*** 41 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு பத்திரப் பதிவு அலுவலகங்களில் கணிசமாக வேலை குறைந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆமென்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 1957-58 முதல் 1962-63 வரையில் ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளின் எண்ணிக்கையை கீழேயுள்ள அட்டவணையில் காணலாம் :—

1957–58	..	..	..	991,552
1958–59	..	..	..	1,028,200
1959–60	..	..	..	1,117,906
1960–61	..	..	..	1,125,214
1961–62	..	..	..	1,102,991
1962–63	..	..	..	1,007,271

இதுபற்றி முடிவாக எதுவும் சொல்வதற்கில்லை. ஏனெனில், 1962-63-ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட தஸ்தவேஜுகளின் எண்ணிக்கை 1957-58, 1958-59-ம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட தஸ்தாவேஜுகளைவிடக் குறைந்தது என்று சொல்வதற்கில்லை. பிந்திய இரண்டு ஆண்டுகளும் சாதாரண ஆண்டுகள்.

(இ) தற்போது இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன் : இந்தப் புது விதி பதிவு நிலையங்களில் அமுல் நடத்தப்படுவதினால் சாதாரண ஏழை மக்கள் தங்கள் நிலங்களை விற்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது, கஷ்டங்கள் ஏற்படுகிறது. ஸ்டாட்டிஸ்டிக்கல் பர்பஸ்க்காகத்தான் இவ்விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே வேறு முறையில் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுக்க வழி செய்து இந்த முறையை கைவிட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஆரம்ப காலத்தில் இதில் பல கஷ்டங்கள் இருந்தன. அது பழக்கத்திற்கு வந்த பிறகு பதிவு செய்வதில் சங்கடம் ஒன்றுமில்லை.

திரு. செ. மாதவன் : விற்பதற்கு முன்னால் ஒவ்வொருவரும் தனித்தனியாக கர்ணத்திடமிருந்து சர்டிபிகேட் வாங்கவேண்டியிருக்கிறது. சர்டிபிகேட் வாங்குவதில் உள்ள கஷ்டம் ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே இதையாவது தவிர்க்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போதுள்ள விதிகள் அவசியமாக இருப்பதால் அதை மாற்றியமைப்பதற்கில்லை.

[20th January 1964

புலவர் கா. கோவிந்தன் : ஒதுக்கப்பட்ட நிலங்களில் ஹரிஜனங்களுக்கென சில நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலங்கள் கண்டிஷன் போட்டு அடமானம் செய்யப்படுகிறது. அதை வாங்கும்போது ஜாதி இந்துக்கள் அது கண்டிஷன் வகையில் வந்தது என்று தெரியாமல் வாங்கி விடுகிறார்கள். அதனால் பின்னால் தொல்லை ஏற்படுகிறது. ஆகவே பதிவு நிலையங்களில் ஒதுக்கப்பட்ட நிலங்கள் என்ற குறிப்பு இருந்தால் அதை அந்த அதிகாரி பார்த்து ஜாதி இந்துக்கள் அந்த நிலத்தை வாங்கக் கூடாது என்ற கருத்து தெரிவிக்கலாம். இதற்கு வழி செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய முன்வருவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அப்படி தவறு இருந்தால் அவ்வப்போது சொல்கிறார்கள். குறிப்பாக ஏதாவது சொன்னால் கவனிக்கலாம்.

நூற்பு ஆலை (தென்னாற்காடு மாவட்டம்)

* 42 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவும் உத்தேசமுண்டா ?

(இ) எந்த இடத்தில் அமைக்க உத்தேசம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுக்காவில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தாலுகாவிற்கு ஒரு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தினிடம் திட்டம் இருந்தது. அது எந்தளவில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லாவிற்கு ஒரு கூட்டுறவு மில் வைக்கிறதாக தீர்மானம். தாலுகாவிற்கு ஒரு மில் வைப்பது அவ்வளவு சாத்தியமில்லை. முயற்சி செய்கிறோம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லா மாயவரம் தாலுகாவில் இவ்வாறு கூட்டுறவு ஆலை ஏற்படுத்த ஏற்பாடு செய்து லட்சக்கணக்கான தொகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது ? சீக்கிரம் அதை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கூட்டுறவு ஆலைக்கு ஷேர் வெகு சீக்கிரத்தில் சேர்த்துக் கொடுத்தால் அது உருவாக்கப்படும். கனம் அங்கத்தினர் தயவு செய்து அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்களின் பதிலில் இருந்து ஜில்லாவிற்கு ஒரு நூற்பாலை அமைப்பதாக சொல்லியிருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கு